B161 · Edu

# PRIZE DAY 1974.

17/6

# HINDU COLLEGE

## CHAVAKACHCHERI

CHIEF GUEST:

*G. Wickramaratne Esqr.*
(Director of Education, Northern Region)

*Mrs. S. Rasiah*
has kindly consented to give away the Prizes.

***

*12th September, 1974.*

# PROGRAMME.

Thevaram and The College Song

1. Principal's Report
2. Address: V. N. Navaratnam Esqr. M. P.
3. Distribution of Prizes: Mrs. S. Rasiah
4. Prize Day Address: G. Wickramaratne Esqr.
5. Vote of Thanks: Mas. J. Jeyakumar (Prefect)

# கதம்ப நிகழ்ச்சிகள்.

1. பாலர் அபிநயம்
2. கர்நாடக சங்கீதம்
3. **Shireen And Her Suitor**
4. காற்றினிலே வருங்கீதம்
5. காணிக்கை (நாடகம்)

# கல்லூரி வாழ்த்துப்பா

இராகம்: தர்பார்　　　　　　தாளம்: ரூபகம்

## பல்லவி

வாழ்க இந்துக்கல்லூரி வாழ்கவே — வாழ்கவே
வாழ்க இந்துக்கல்லூரி வாழ்கவே — வாழ்கவே

## அனுபல்லவி

வாழ்க நந்திரு வாழ்க நம்கலை
நாளும் நன்மையும் உண்மையும் ஓங்கவே　　(வாழ்க)

## சரணம்

அறமும் அன்பும் அருளும் தழைக்க
ஆன்மநேய உணர்வு செழிக்க
உறவு கனிந்தே உயர்வு நிலைக்க
உலகில் புகழும் அறிவும் தரிக்க　　(வாழ்க)

# அதிபரின் அறிக்கை - 1974

வட மாகிலக் கல்வியதிபதி

திரு G. விக்கிரமரத்தின அவர்களே!

மாண்புமிகு தேசியப் பேரவை உறுப்பினர்

திரு. வ. ந. நவரத்தினம் அவர்களே!

திருமதி. இ. நவரத்தினம் அவர்களே!

வடமாகிலக் கல்வித் திணைக்களக் கணக்காளர்

திரு. S. இராசையா அவர்களே!

திருமதி. S. இராசையா அவர்களே!

கனம் கல்வியதிகாரி அவர்களே!

பெற்ருேர்களே! பெரியோர்களே!

சகோதர ஆசிரிய ஆசிரியைகளே!

அன்புள்ள மாணவ மாணவிகளே!

உங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த வணக்கம் உரித்தாகுக.

கல்லூரிப் பரிசளிப்பு விழாவினைக் கண்டு இன்புறுவதற்காகக் கல்லூரியில் என்றென்றும் நல்லபிமானம் மிக்க பெற்ருேர்கள், பெரியோர்கள், பழைய மாணவர்கள் எனப் பல திறத்தினராய், எண்ணுக்கடங்கா வண்ணம் இங்கு திரண்டிருக்கும் உங்கள் அனைவரையும் சிரந்தாழ்த்திக் கரங் கூப்பி வருக வருக என வரவேற்பதில் அளவிலா ஆனந்தமடைகிருேம். தங்கள் வருகை எங்களுக்குப் புத்துணர்ச்சியையும் புதியதோர் தென்பையும் அளிக்கிறது. இக்கல்லூரியிற் கல்வி பயிலும் சிருர்களின் சிறப்புக்களைச் சீர்தூக்கவும், துயரினைப் போக்கவும், கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கவும், கல்லூரியின் முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்கவும், தங்கள் அனைவரது வருகையும் பயன்படுமாதலால், மீண்டும் ஒருமுறை வருக வருக

என அன்பாக அழைப்பதுடன், தங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்று போல் என்றென்றுந் தேவை என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேம்.

எமது பிரதம விருந்தினர்
திரு. G. விக்கிரமரத்தின அவர்களே!

எம்முடைய அழைப்பினைப் பெருமனதுடன் ஏற்றுப் பிரதம விருந்தினராகத் தாங்கள் இன்றைய தினம் எம் மத்தியில் இன்முகத்தோடு அமர்ந்திருப்பதைக் கண்டு, பெருமகிழ்வும் பெருமிதமும் அடைகிறேம். ஆழ்ந்த அறிவும் உலகியல் அனுபவமும் பெற்று அநேக ஆண்டுகள் ஆசிரியராகவும் அதிபராகவும் அமர்ந்து, தென்னிலங்கையில் நாலந்தாக் கல்லூரி, குளியாப்பிட்டியா கனிஷ்ட பல்கலைக்கழகம், கொழும்பு நுண்கலைக் கல்லூரி, காலி தொழில் நுட்பக் கல்லூரி ஆதியாம் நிறுவனங்களில் எல்லாம் கல்விப்பணி புரிந்த தாங்கள், இன்று எமது வட பிரதேசக் கல்வியதிபதியாய்ப் பதவி வகிப்பது, எமது கல்வி நிறுவனங்களிற் காணப்படும் கஷ்ட நஷ்டங்களை நீக்கவும், எழுமையும் ஏமாப்புடைத்தாய் கல்வியைச் சாதிமத பேதமின்றிச் சகல மாணவரும் சரிநிகர் சமானமாகப் பெறவும் நாட்டிற்கு நலந் தரும் நற்பிரசைகளை உருவாக்குங் கல்வித் துறையானது இம்மாநிலத்தில் மென்மேலும் வளரவும் பேருதவியாக அமையும் என்பதில் எமக்கு எட்டுணையுஞ் சந்தேகமில்லை. அன்றியுந் தங்கள் தாய் தந்தையர் மாத்திரமன்றித் தாங்கள் பிறந்து வளர்ந்த குடும்பமே கல்விச் சேவையுடன் தொடர்புற்ற காரணத்தால், கல்விப் பகுதியிற் காணப்படும் குறைநிறைகள் தங்களுக்குப் புதியனவாகவோ அன்றேல் புரியாதனவாகவோ இருக்க முடியாது என்பது எமது எண்ணம். கல்வித்துறையில் அத்தகைய பல திறப்பட்ட அனுபவங்களும், அதிக ஈடுபாடும் ஆர்வமுங் கொண்ட தங்களை இவ்விழாவின் பிரதம விருந்தினராக வரவேற்பதில் பேருவகை கொள்ளுகிறேம். தங்கள் வாழ்வு

மேலும் வளம் பெற்று ஓங்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேம்.

திரு. நவரத்தினம் அவர்களே!

திருமதி நவரத்தினம் அவர்களே!

தங்களையும் இவ்விழாவிற்கு வரவேற்பதில் பேருவகை அடைகிறேம். கல்லூரி வளர்ச்சியிலே கரிசனை கொண்டு, கல்லூரியின் நலவுரிமைகளைக் காப்பதிலே கண்ணுங் கருத்துமாக இருந்து, கல்லூரி இயங்குவதற்குப் பல வழிகளிலும் உதவி புரியுந் தங்களையும் வருக வருக எனக்கூறி அன்பாய் அழைக்கிறேம்.

வட மாநிலக் கல்வித் திணைக்களக் கணக்காளர்

திரு. இராசையா அவர்களே!

கல்லூரியின் குறை நிறைகளைக் தங்களிடம் கூறும் போதெல்லாம் அவற்றை ஆறுதலாகவும் பொறுமையாகவுங் கேட்டு, கல்லூரிக்குத் தேவையான தளபாடங்களை, உபகரணங்களைத் தந்துதவியும் மற்றுந் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டும், வளர்ந்து வரும் இக்கல்லூரியின் மீது அக்கறை காட்டுந் தங்களை இன்றைய விழாவிற்கு வரவேற்பதிற் பேருவகை அடைகிறேம்.

திருமதி இராசையா அவர்களே!

எமது சிறுர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் பரிசில்களை அவர்களுக்கு வழங்க முன்வந்தமைக்காக முதற்கண் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேம். தாங்கள் மாணவியாய் இருந்த காலத்தில், படித்த கல்லூரியின் வளர்ச்சியிலே கரிசனை காட்டி, கலைநிகழ்ச்சி நடாத்தி, அக்கல்லூரியை வளர்க்கத் தாங்கள் எடுத்த முயற்சிகள் பற்றி அறிந்து புளகாங்கித மடைகிறேம். கல்லூரிப் பற்றிலும், கலையார்வத்திலும் இன்றைய

மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் தங்களிடமிருந்து எங்கள் சிறுர்கள் பரிசில் பெறுவதற்குக் கிடைத்த தருணத்தை என்றுமே மறக்க மாட்டார்கள். தங்களுக்கு எங்கள் நல்லாசிகள் உரித்தாகுக.

**பெற்றேர்களே, பெரியோர்களே!**
**பழைய மாணவர்களே நண்பர்களே!**

இக்கல்லூரியின் வளர்ச்சி கருதி, நிதி – பொருள் – சரீர உதவி ஆதியாம் பல வழிகளிலும் ஒத்துழைப்பும் உதவியும் நல்கி, கல்லூரியின் சகல முயற்சிகளுக்கும் சளையாது ஆக்கமும் ஊக்கமும் அளித்து, உற்றவிடத்து உறுதுணையாக அமையும் உங்கள் அனைவரையும் வருக வருக என அன்பாக அழைத்துக் கல்லூரியின் ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிக்க விழைகின்றேன்.

**மாணவர்கள்:-**

இவ்வாண்டு எங்கள் கல்லூரியில் 2005 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

| | | |
|---|---|---|
| வகுப்பு | 1 — 5 | : 595 |
| ,, | 6 — 8 | : 692 |
| ,, | 9, 10 | : 532 |
| ,, | 11, 12 | : 186 |
| மொத்தம் | | : 2005 |

**ஆசிரியர்கள்:-**

தொகை:- 67 ஆசிரியர்கள் தற்போது கடமையாற்றுகின்றனர். அவர்களுள் 16 பேர் பட்டதாரிகளாவர்.

**புதுமுகங்கள்:-**

இந்த வருடம் எமது கல்லூரிக்கு மாறிவந்த ஆசிரியர்களுக்கு எங்கள் வரவேற்பு உரித்தாகுக.

செல்வி T. சின்னத்தம்பி B. Sc.
திருமதி M. பாலசுந்தரம் B. A
திரு. V. S. சரவணமுத்து T. T1.

**மீட்சி:-**

கடந்த பல ஆண்டுகளாகச் சங்கீத ஆசிரியராகக் கடமை புரிந்த திரு. S. S. இரத்தினம்பிள்ளை அவர்கள் மீண்டும் எமது கல்லூரிக்கு மாற்றம் பெற்று வந்துள்ளார்.

**நியமனம்:-**

க. பொ. த. (உ. த. ) வகுப்புக்களிற் கல்வி கற்பிப்பதற்காக வசதிப்பணத்தில் நியமிக்கப்பட்ட செல்வி. K. இரத்தினசிங்கம் B. Sc. அவர்கள் இவ்வாண்டு நிரந்தர நியமனம் பெற்றுச் சேவை புரிந்து வருகிறார்.

**மாறிச் சென்றோர்:-**

✱ இந்த ஆண்டிலே எமது ஆசிரிய குழுவைச் சேர்ந்த திரு. G. அருட்பிரகாசம் அவர்கள் யா / புலோலி ஆங்கில பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். கடந்த 7 ஆண்டுகளாக ஆங்கில பாடத்தைச் சிறப்புறக் கற்பித்த இவ்வாசிரியர் வகுப்பு வேலைகளில் மட்டுமன்றிப் பாடப்புறக் கருமங்களிலும் அயராது உழைத்து வந்தார்.

✱ எங்கள் கல்லூரியில் கடந்த 6 ஆண்டுகளாகக் கடமை புரிந்த திரு. S. துரைராசா அவர்களும் யா / புற்றளை மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். ஆங்கில பாடத்தைப் போதிப்பதோடு அமையாது கல்லூரியில் நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் உற்சா

கமாக உழைக்கும் இயல்பினை உடையவர். கல்லூரிச் சாரணர் குழுவிற்குப் பொறுப்பாக இருந்து சீரிய தொண்டாற்றியவர்

✱ இக்கல்லூரியிற் கற்பித்த வித்துவான். மு. சபாரத்தினம் அவர்கள் இவ்வாண்டு யா / சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். கல்லூரிச் சமயக்குழுவின் தலைவராக இருந்து அருந் தொண்டாற்றிய அவர் பாடப் புறக் கருமங்களில் எல்லாம் சிறப்பாகப் பணியாற்றுபவர்.

✱ பிரதம பகுதியில் நீண்ட காலம் கடமையாற்றிய திரு. வ. சின்னத்துரை அவர்கள் யா / பூநகரி நல்லூர் அ. த. க. பாடசாலைக்கு அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவர் கல்லூரிச் சமயக் குழுவில் சிறப்பாகப் பணியாற்றியதுடன் கல்லூரியில் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளிலும் அயராது உழைப்பவர்.

**வசதிப்பண ஆசிரியர்;-**

உயர்தர விஞ்ஞான வகுப்புக்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவைப் பட்டமையால் வசதிப் பணத்தில் செல்வி. K. பாலசிங்கம் B. Sc. அவர்கள் நியமிக்கப்பட்டுக் கடமையாற்றி வருகின்றார்.

**பட்டப்பின் படிப்பு:-**

எம் மத்தியில் அரும் பணியாற்றிய திரு. K. சந்திரசேகரம் அவர்கள் பல்கலைக்கழக டிப்ளோமாப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு படிப்பு லீவிற் சென்றுள்ளார். அவர் பொருளியல் போன்ற புதிய பாடங்களை க. பொ. த. சாதாரண, உயர்தர வகுப்புகளில் திறமையாகக் கற்பித்தவர். கல்லூரியில் நூலகத்தைப் பொறுப்பேற்றுத் திருத்தியமைத்த பெருமை இவருக்கு உரியது. மேற்படிப்பு முடிந்ததும் திரும்பவும் வந்து கடமையாற்றுவாரென எதிர்பார்க்கிறோம்.

**அலுவலக, நூலக ஊழியர்கள்:-**

முன்பு கல்லூரியின் லிகிதராகக் கடமையாற்றிய திரு. G. பெனடிக்ற் அவர்கள் மாற்றம் பெற்றுச் சென்றமையால் அந்த இடத்திற்கு செல்வி. P. சின்னத்தம்பி B. A. அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

நூலகப் பொறுப்பாளராக திரு. K. மயில்வாகனம் B. A. அவர்கள் இவ்வாண்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் அலுவலகத்தில் தற்காலிக ஊழியராகக் கடமையாற்றிய திரு P. K. சிவசம்பு அவர்கள் அண்மையில் நிரந்தர ஊழியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதின்மூன்று ஆண்டுகள் காவலாளியாகக் கடமையாற்றிய திரு. K. தம்பையா அவர்கள் அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

**கல்விப் பெறுபேறுகள்:-**

✵ 1973-ம் ஆண்டு க. பொ. த. (உ, த.) பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றியோர் 25 பேர். இவர்களிற் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டோர் 16 பேர்.

✵ 1973-ம் ஆண்டு க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் தோற்றியோர் 32 பேர். தகுதி பெற்ருேர் 10 பேர். இவர்களுள் ஒருவர் கல்லூரியின் வரலாற்றிலேயே முதன் முறையாக மருத்துவத் துறைக்கு அனுமதிக்கப்பட்டுப் பல்கலைக்கழகத்திற் பயின்று வருகிருர்.

✵ 1973-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 106 பேர் ஆறு பாடங்களிலும் அதற்கு மேற்பட்ட பாடங்களி

லும் சித்தியடைந்தனர். அவர்களுள் 23 பேர் கலைப் பகுதி உயர்தர வகுப்புக்களிலும், 65 பேர் விஞ்ஞான உயர்தர வகுப்புக்களிலும் கற்பதற்குத் தகுதிபெற்றனர்.

✱ வடமாகாண ஆசிரிய சங்கத்தால் (N. P. T. A) நடாத்தப்பட்ட 8-ம் வகுப்புப் பரீட்சையில் 95 பேர் சித்தியடைந்தனர். அவர்களுள் 17 பேர் முதலாம் பிரிவிற் சித்தியடைந்தனர்.

✱ வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட 5-ம் வகுப்புப் பரீட்சையில் 142 பேர் சித்தியடைந்தனர். இவர்களுள் முதலாம் பிரிவில் 61 பேரும், இரண்டாம் பிரிவில் 67 பேரும், மூன்றும் பிரிவில் 14 பேரும் சித்தியடைந்தனர்.

✱ 1973-ல் நடைபெற்ற 7-ம் வகுப்புப் புலமைப் பரிசிற் பரீட்சையிலே தெரிவு செய்யப்பட்ட N. கேதீஸ்வரன், A. சத்தியானந்தா, P. ஜெயானந்தன், K. இளஞ்சேய், P. இன்பக்கலாயினி ஆகிய இவ்வைந்து மாணவர்க்கும் எமது பாராட்டுதல்கள்.

✱ 1973-ல் நடைபெற்ற 5-ம் வகுப்புப் புலமைப் பரிசிற் பரீட்சையில் 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சி. சிவோத்தமன், ந. பிரபா, அ. தேவந்தி, சு. மோகனதாஸ், ஆ. நடேசன் ஆகிய இவ்வைந்து மாணவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

✱ கொழும்பு விவேகானந்த சபை நடாத்திய 1973-ம் ஆண்டுச் சைவ சமய பாடப் பரீட்சையில் 1033 பேர் தோற்றி 830 பேர் சித்தியடைந்தனர். பரீட்சையிற் தோற்றியோர் தொகையிலும், சித்தியடைந்தோர் தொகையிலும் எமது கல்லூரி அகில இலங்கையிலும் முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. அகில இலங்கையிலும் முதலாம் இடத்தைப் பெற்ற மூன்றும் வகுப்பைச் சேர்ந்த செல்வி. பவானி தம்பாபிள்ளை பாராட்டப்பட வேண்டிய மாணவியாவர்.

✯ பாலர் வகுப்புத் தொடக்கம் பன்னிரண்டாம் வகுப்பு வரை இக்கல்லூரியிலே கல்வி பயின்று தனிப்பட்ட கல்வி நிலையம் எதிலும் பயிலாது, க. பொ. த, (உ. த.) பரீட்சையில் முதலாம் முறையிலேயே நான்கு பாடங்களிலேயுஞ் சித்தியடைந்து, மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட செல்வி பராசக்தி இளையதம்பி என்னும் மாணவிக்கு எமது பாராட்டுக்ககள் உரித்தாகுக. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் மருத்துவத் துறையில் அனுமதிக்கப்பட்டமை இக்கல்லூரியின் வரலாற்றிலே ஒரு திருப்பு முனையாக அமையுமென நம்புகிறோம். இவருடைய மேற்படிப்புக்கு எமது பெற்றோர் ஆசிரியர் சங்கமும் சாவகச்சேரி நகர சபையுக் உபகாரப் பணம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**விளையாட்டுப் பகுதி:-**

கல்லூரியின் மாணவர் தொகை அதிகரித்து வருவதால், இல்லங்களின் எண்ணிக்கையை நான்கிலிருந்து ஐந்தாக அதிகரிக்க வேண்டுமெனவும், மாணவர்களை மீண்டும் பிரித்து இல்லங்கள் திறமாக இயங்கத் தக்கதாகப் புனரமைப்புச் செய்ய வேண்டு மெனவும், கல்லூரி ஆசிரிய சங்கம் தீர்மானித்ததற் கமைய இல்லங்களின் புனரமைப்பு வேலைகள் தற்போது முடிவுற்று, முன்னர் இருந்த நான்கு இலலங்களுடன் மேலும் ஓர் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.

சமயத்துறை:-

கல்லூரியின் சமயக்குழு வழமை போலச் சிறப்பாக இயங்கிக் காலை ஆராதனை, நவராத்திரி பூசை, நாயன்மார் குருபூசைகள் ஆகியவற்றைச் சிறப்பாக நடாத்தி வருகிறது.

இலங்கைக்கு விஜயஞ் செய்யும் அறிஞர்களையும், சமயப் பெரியார்களையும் இக்கல்லூரிக்கு அழைத்து, நாமும் அவர்களது அறிவுரைகளைக் கேட்டுப் பயன்பெற உதவும் யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கம், சைவ பரிபாலன சபை என்பவற்றிற்கும நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

**சாரணர் இயக்கம்:-**

எங்கள் கல்லூரிச் சாரணர்கள் கல்லூரியின் வைபவங்கள் அனைத்திலும் பெருந் தொண்டு புரிந்து வருகின்றனர், குருடர் செவிடர்க்கான வருடாந்த நிதி சேகரிப்பு, கயரோகத் தடுப்புச் சங்கத்தினரால் நடாத்தப்படும் கொடிதினம் போன்ற சமூக சேவைகளிலும் எமது சாரணர்கள் உற்சாகமாக ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்

**நூலகம்:-**

கல்லூரியின் நூலகம் இவ்வாண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு, ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் பெரிதும் பயன்படத்தக்க வகையில் இயங்கி வருகிறது. வழமைபோல் இவ்வாண்டும் புதிய பல நூல்களும் சஞ்சிகைகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன தற்போது சுமார் 400 பேர் அங்கத்தவர்களாகிப் பயனடைந்து வருகின்றனர்.

**புதிய கட்டிடங்கள்:-**

★ இவ்வாண்டின் ஆரம்பத்தில் 4 வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டிடம் நிருமாணிக்கப் பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கான செலவு 20,000 ரூபா. இதில் 16,000 ரூபாவை அரசாங்கம் நன்கொடையாக வழங்க, மிகுதியான 4,000 ரூபாவைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் செலவிட்டு அமைத்துள்ளது. கல்லூரியின் மாணவர் தொகை ஆண்டு தோறும் அதிகரித்து வருவதால், இட

வசதியை விஸ்தரிப்பதன் அவசியத்தை உணர்ந்து, புதிய கட்டிடங்களை நிறுவுவதற்கு மிகவும் உற்சாகமாக முன் வந்து உழைக்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர்க்கும், அரசாங்க நன்கொடையைத் தந்துதவும் கல்விப் பகுதியினர்க்கும் கல்லூரியின் சார்பில் நன்றி தெரிவிப்பது எனது முக்கிய கடமையாகிறது.

* பாலர் வகுப்புச் சிறார்களுக்கு எனத் தனியான வகுப்பறைகள் அமைக்க வேண்டிய அவசியம் புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டமையால், இவ்வாண்டு 4,000 ரூபா செலவில் பாலர் வகுப்பறைகள் அமைத்துள்ளோம்.

* நூலகத்திற்கென ஒரு புதிய மாடிக்கட்டிடம் தற்போது நிருமாணிக்கப்பட்டு வருகிறது. இதற்கான அத்திவாரக்கல் திரு. மு. தா. சுப்பிரமணியம் J. P. அவர்கள், திரு. வீ. எம். கணபதிப்பிள்ளை அவர்கள், திரு கணேசு அவர்கள் ஆகியோரால் நாட்டப்பட்டது. அத்திவாரக் கல் நாட்டியமைக்கும், கட்டிட நிதிக்கு அன்பளிப்பு செய்தமைக்காகவும் அவர்களுக்குக் கல்லூரியின் சார்பிலும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். 80,000 ரூபா மதிப்பீட்டில் உருவாகி வரும் அக்கட்டிடத்தைப் பூர்த்தி செய்வதற்காக பெற்றோர் ஆசிரியர் சங்கம் சாவகச்சேரியிலும், கிளிநொச்சியிலும் மல்யுத்தப் போட்டி நடாத்தியது. இப் போட்டியை நடாத்துவதற்கு நிதி, பொருள், சரீர உதவி ஆகிய பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய கல்லூரி ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், அனுதாபிகள் ஆகிய அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன்

* விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடம் இவ்வாண்டு பூர்த்தி செய்யப்பட்டு, மேலும் பல வகுப்புகள் விஞ்ஞான

ஆய்வுகூடத்தைப் பயன்படுத்த உதவும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

**ஆசிரிய சகோதரத்துவம்:-**

கல்லூரியின் ஆசிரிய சகோதரத்துவம் ஆசிரியர்களிடையே ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதுடன் அங்கத்தவரின் நலனுக்காகவும் அருந்தொண்டாற்றி வருகிறது. ஆசிரியர்களிடையே சிக்கனத்தையும் சேமிப்பையும் வளர்க்கும் நோக்குடன் இவ்வாண்டு கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

**மாணவர் சங்கங்கள்:-**

உயர்தர மாணவ மன்றம், விஞ்ஞான மன்றம், சமூகக் கலை மன்றம் ஆகிய மாணவர் சங்கங்கள் சிறப்பாக இயங்கி, விவாதங்களை நடாத்தி, மாணவரிடையே பேச்சு, எழுத்து, இசை ஆற்றல்களை வளர்க்கத் துணை புரிகின்றன.

**மாணவ தலைவர்கள்:-**

கல்லூரியின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலை நாட்டுகின்ற பொறுப்பு மிக்க வேலையைத் திறமையுடன் ஆற்றி வரும் மாணவ தலைவர்கள் சபையைப் பாராட்டாமல் விட முடியாது. இன்று மாணவ தலைவர்கள் சபையிலே 18 மாணவ தலைவர்களும், 13 மாணவ தலைவிகளும் உள்ளனர். கல்லூரியில் நடைபெறும் சகல வைபவங்களையும் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடாத்தும் மாணவ தலைவர்களுக்கும், அவர்களை நல்வழியில் இட்டுச் செல்லும் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நன்றியுரை:-

எமது கல்லூரி அடைந்துள்ள வெற்றிகளுக்கும், பெறுபேறுகளுக்கும் அயராது ஒத்துழைப்பை நல்கும் ஆசிரியர்களினதும் பணிவான மாணவர்களினதும் கூட்டு முயற்சியே காரணம் எனலாம். துணை அதிபர் திரு. க. மகேஸ்வரன் அவர்களுக்கும், கனிஷ்ட அதிபர் திரு. கு. சங்கரப்பிள்ளை அவர்களுக்கும், மற்றும் சகல ஆசிரியர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இக்கல்லூரி திறம்பட இயங்குவதற்கு உறுதுணையாகவிருக்கும் எமது அலுவலக உதவியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

இறுதியாக எமது வேண்டுகோளுக்கு இசைந்து, இப் பரிசளிப்பு விழாச் சிறப்பாக அமைவதற்குப் பல வகைகளிலும் உதவிய அனைவருக்கும், பரிசில்களைத் தந்துதவிய அன்பர்களுக்கும், நீண்ட இவ்வறிக்கையினைப் பொறுமையுடன் செவிமடுத்த தங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

பூ. வெற்றிவேலு
அதிபர்

12 - 9 - 74.

1974-ம் ஆண்டு

க. பொ. த. (உ. த.) பெறுபேறுகள்:-

கலைப்பிரிவு:-

| | | |
|---|---|---|
| தோற்றியோர் தொகை | : | 19 |
| நான்கு பாடங்களிற் சித்தியடைந்தோர் | : | 16 |
| மூன்று பாடங்களிற் சித்தியடைந்தோர் | : | 2 |

இவர்களுள் 18 பேர் தகுதி பெற்றனர்.

விஞ்ஞான பிரிவு:-

| | | |
|---|---|---|
| தோற்றியோர் தொகை | : | 27 |
| நான்கு பாடங்களிற் சித்தியடைந்தோர் | : | 7 |
| மூன்று பாடங்களிற் சித்தியடைந்தோர் | : | 6 |

இவர்களுள் 13 பேர் தகுதி பெற்றனர்.

—0—

# Memorial Prize Donors.

The College In memory of Mr. T. Muthucumaru
,, ,, ,, ,, S. K. Chelliah
,, ,, ,, ,, C. Balasubramaniam
,, ,, ,, ,, M. Chelliah
Mr. S. S Arulanandam ,, ,, of his mother
Mrs. Annammah Sinnathamby
Athmajothy Nilayam

திருக்கணித அச்சகம், மட்டுவில்.